# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 2567/விசாரணை/E/2024</u>**

திரு.ச.ரா.சௌந்தரபாண்டியன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவித் திட்ட அலுவலர்(உட்கட்டமைப்பு-1),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 30.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணையின்போது தாக்கல் செய்த மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பெருந்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.568/20220டி7 நாள் 08.08.2022 பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நாள் 20.07.2022 மற்றும் 25.07.2022 என்பது குறித்து தொடர்புடைய ஆவணங்களை பரிசீலனை செய்து, அவற்றின் நகல்களையும், அது குறித்த தகவல்களையும் மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 22.05.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் தவறாமல் சமர்ப்பிக்குமாறு மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தவறும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி நஷ்டஈடு வழங்கிட பொது அதிகார அமைப்பிற்கு உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.*

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர்(உட்கட்டமைப்பு-1)/பொதுத் தகவல் அலுவலர் திரு.சென்னகிருஷ்ணன் 22.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலரின் 21.05.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலர் 21.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், மேல்முறையீட்டாளருக்கு 08.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பெருந்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.568/20220டி7 நாள் 08.08.2022 பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நாள் 20.07.2022 மற்றும் 25.07.2022 தொடர்புடைய ஆவணங்களை கட்டணமின்றி 11.05.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை 13.05.2026 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணைய தள Tracking Report-ன் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். இன்று ஆணையத்தில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் ஒப்பந்தப்புள்ளி கோரிய நாட்கள் 14.07.2022 மற்றும் 05.08.2022 என்றும், ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்த நாட்கள் 20.07.2022 மற்றும் 25.07.2022 ஆகும் என்றும், மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொடர்பான ஆவண நகல்கள் மேல்முறையீட்டாளருக்கு 430 பக்கங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. இவ்வாணையத்தின் 30.03.2026 தேதியிட்ட உத்தரவினை மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலரால் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். CP 2567/விசாரணை/E/2024**</u>

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மதுரை.

பொதுத் தகவல் அலுவலர்/
உதவித் திட்ட அலுவலர்(உட்கட்டமைப்பு-1),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மதுரை.

திரு.ச.ரா.சௌந்தரபாண்டியன் த/பெ.ச.ராசு
5/11B திருநகர் 5வது தெரு,
வடபழனி, சென்னை-26.

Copy to: File
RJ/PS 1.6